Ho. Kochs moon

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 மாசி (01 - 02 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 348

## 14 தமிழ் வைத்திய நிபுணர் கொழும்பில் சேவை

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதியில் உள்ள மருத்துவ மனைகளுக்கு மருத்துவ நிபுணர்கள் அதிகமாக தேவைப்படும் அதேநேரத்தில் கொழும்பில் 14 தமிழ் வைத்திய நிபுணர்கள் கடமையாற்றுகிறார்கள். நரம்பு சம்பந்தமான அறுவை சிகிச்சை நிபுணர்கள் இருவரும், இருதயம் சம்பந்தமான இருவரும், சிறுநீர் தொடர்பான நிபுணர் ஒருவரும், (4ஆம் பக்கம் பார்க்க)

# புதுக்குடியிருப்பில் குண்டுவீச்சு; 17 பேர் பலி; 20க்கு மேல் காயம்

(நமது நிருபர்)

புதுக்குடியிருப்பு சந்தியில் சிறிலங்கா விமானப்படை நேற்று முன்தினம் மேற்கொண்ட தாக்குதலினால் பதினேழுக்கு மேற்பட்ட பொதுமக்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இருபதிற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் திருமலை அகதிகளாகும்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் 3 குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதலில் புதுக்குடியிருப்பு மத்திய மகாவித்தியாலயம் பலத்த சேதத்திற்கு உள்ளானது. இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் திருமலையிலிருந்து அகதிகளாக வந்த தகப்பனும் மகளுமான வே. கந்தசாமி (வயது 35), க. சரிதா (வயது 14) ஆகியோரும் அடங்குவர்.

இத் தாக்குதலில் 20க்கும் மேற்பட்ட மக்கள் படுகாயம் அடைந்தனர். இதில் பதின்மூன்றுபேர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கனகலிங்கம் (வயது 38 அகதி (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### வசிட்டன்

நேற்றுக்காலை 9-45 மணியளவில் மாவட்டபுரத்தில் இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் வசிட்டன் (கணேசபிள்ளை அருணாசேகரன்-கோண்டாவில்) என்ற போராளி வீரமரணமடைந்தார்.

### ஆனையிறவில் 4 பேர்

(ஆனையிறவு)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம்காலை 10-30 மணியளவில் வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் நான்கு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

இவர்களின் பெயர் விபரம் வருமாறு:

நிசாந்தன் (கந்தசாமி உதய

## வன்னிப் பிராந்தியத்திலும் பொருள்கள் விலை நிர்ணயம்

(நமது நிருபர்)

வன்னிப் பிராந்தியமாகிய வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தற்போதைய சூழ்நிலையில் அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. அதனால் மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றார்கள் என்றும், போட்டி வியாபாரிகளினால் ஏற்பட்டுள்ள இந்த (4ஆம் பக்கம் பார்க்க)

## கைபூவிற்கு செருப்பு வீச்சு

(டோக்கியோ)

ஜப்பானிய பாராளுமன்றத்தில் நேற்றுநடைபெற்ற மேல் சபைக்கூட்டத்தில் ஜப்பானிய பிரதமர் டோக்கி கைபூ மீது சப்பாத்துக்கள் வீசப்பட்டன. விவாதத்தின்போது கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் கேட்ட கேள்வியொன்றிற்கு பிரதமர் பதிலளிக்கும் போது பார்வையாளர் கலரியிலிருந்து சப்பாத்துக்கள் வீசப்பட்டுள்ளன. இவ்வளவை குடாப் போரை எதிர்ப்பவர்களினால் வீசப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

## குண்டு சரிபார்த்தவர் படு காயம்

(நல்லூர்)

வேட்டைத் துப்பாக்கிக்கு தாமே தயாரித்த குண்டைச் சரிபார்த்த ஒருவர் படுகாயத்

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# 25 தமிழர் மூழ்கி மரணம்; வீடுகள் பயிர்களுக்கு தீவைப்பு

## ஆனையிறவில் 4 பேர்

(ஆனையிறவு)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் காலை 10-30 மணியளவில் வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் நான்கு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

இவர்களின் பெயர் விபரம் வருமாறு:

நிசாந்தன் (கந்தசாமி உதய குமார்-புத்தூர்) இருபா (சோமசுந்தரம் காண்டீபன் கைதடி) வினோத் (மாணிக்க ராசா முரளி-நாவற் கோவில்) கலீபன் (கந்தசாமி யோகநாதன் கொடிகாமம்)

## மயூரன்

(மட்டக்களப்பு)

குறிஞ்சாமுனை என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப்புலி போராளியான மயூரன் (நாவற்குடா) கடந்த 30 ஆம் திகதி முற்பகல் பதினொரு மணியளவில் வீரமரணமடைந்தார்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

அதிகளாகவிருந்த தயப்பனும் மகளுமான வே. கந்தசாமி (வயது 35), க. சரிதா (வயது 14) ஆகியோரும் அடங்குவர். இத் தாக்குதலில் 20க்கும் மேற்பட்ட மக்கள் படுகாயம்

(நமது நிருபர்)

வன்னிப் பிராந்தியமாகிய வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தற்போதைய சூழ்நிலையில் அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. அதனால் மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றார்கள் என்றும், போட்டி வியாபாரிகளினால் ஏற்பட்டுள்ள இந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

யிலிருந்து சப்பாத்துக்கள் வீசப்பட்டுள்ளன. இவை வளைகுடாப் போரை எதிர்ப்பவர்களினால் வீசப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# 25 தமிழர் மூழ்கி மரணம்; வீடுகள் பயிர்களுக்கு தீவைப்பு

(மட்டக்களப்பு)

வெட்டுவாய்க்கால் ஆற்றை கடக்க முற்பட்ட பொதுமக்கள் இருபத்தைந்து பேர் வரையில் கரை புரண்டோடிய வெள்ளத்தால் அள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த 13 ஆம் திகதியன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

கள்ளிச்சை, செங்கலடி, சித்தாண்டி, கிரான் இராணுவ முகாம்களிலிருந்து ஏககாலத்தில் புறப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோவினரும் மயில்வெட்டுவான், பாலைமடுப் பகுதிகளைச்சுற்றி வளைத்தபோது அதிலிருந்து தப்புவதற்காக முந்தன்குமார வெளிப் பகுதியிலுள்ள வெட்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு சரிபார்த்தவர் படு காயம்

(நல்லூர்)

வேட்டைத் துப்பாக்கிக்கு தாமே தயாரித்த குண்டைச் சரிபார்த்த ஒருவர் படுகாயத்திற்கு இலக்கானார். தமது வயல்களை நாசம் செய்யும் காட்டு மிருகங்களை துரத்துவதற்காக வேட்டைத்துப்பாக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் கடும் மோதல்; இராணுவம் முகாம் திரும்பியது

(ஆனையிறவு)

ஆனையிறவில் நேற்று முன்தினம் வெளியேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சில மணிநேரமாக கடும் மோதல் இடம்பெற்றது.

காலை 10.30 மணிக்கு தொடங்கிய இம் மோதல் நண்பகல் வரை நீடித்தது. விடுதலைப்புலிகளின் கடும் எதிர்ப்பைத்தொடர்ந்து இராணுவம் இழப்புகளுடன் பின்வாங்கிச் சென்றது.

இந்த மோதலில் புலிகள் தரப்பில் நான்கு புலிகள் வீரமரணமடைந்தனர்

### வளைகுடாவில் எண்ணெய் நிரப்ப

## அமெரிக்கா கோரிக்கைக்கு சிறிலங்கா இணக்கம்

(கொழும்பு)

வளைகுடாப் போரில் ஈடுபடும் அமெரிக்க விமானங்களுக்கு எரிபொருள் நிரப்ப இலங்கை அரசு அங்கீகாரம் வழங்கியிருப்பதாக பி.பி.ஸி. செய்திகள் தெரிவிக்கின்றன.

குவைத்திலிருந்து ஈராக் வெளியேற வேண்டும் என்ற ஐ.நா. தீர்மானத்தை இலங்கை ஆதரித்த போதிலும் ஈராக்கிற்கு எதிரான எல்லா

(4ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு தமிழ் குடும்பஸ்தர்கள் விநாயகபுரத்தில் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள விநாயகபுரம் என்ற கிராமத்தில் நான்கு குடும்பஸ்தர்களை சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக்கொலை செய்ததுடன் பல வீடுகளுக்கும் தீயிட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை திருக்கோவிலில் நிலைகொண்டிருக்கும் விசேட அதிரடிப் படையினர் மேற்படி கிராமத்தைச் சுற்றிவளைத்து ராஜா, கந்தசாமி, அரசரட்ணம், வடிவேல், விஜயன் ஆகியோருக்குச் சொந்தமான வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பத்தரைக் கட்டையில் கிளைமோர் தாக்குதல்

(மட்டக்களப்பு)

வவுணதீவு முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருக்கு பத்தரைக் கட்டை எனும் இடத்தில் வைத்து விடுதலைப்புலிகள் கிளைமோர் தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதல் கடந்த 29 ஆம் திகதி மாலை 5.45 மணியளவில் இடம்பெற்றது. இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வளைகுடாப் பிரச்சினை:

## ஈரானின் புதிய யோசனைகளை ஈராக் ஏற்றுக்கொண்டுள்ளது

(தெஹ்ரான்)

பாரசீக வளைகுடா யுத்தத்தை ஒய்வுக்குக் கொண்டு வருவதற்கு ஈராக் ராஜதந்திரிகள் மட்டத்திலான ஒரு புதியயோசனையை முன்வைத்துள்ளது. இந்த யோசனைக்கு ஈராக் இணங்கியுள்ளதாக ஈராக் செய்திகளை மேற்கோள்காட்டி பி.பி.ஸி. அறி

(4ஆம் பக்கம் பார்க்க)

### பூந்தோட்ட இராணுவம்

## திடீர் ஷெல் தாக்குதல் பல பொதுமக்கள் காயம்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரால் திடீரென்று ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் சிலர் காயமடைந்தனர்.

கடந்த 30 ஆம் திகதி குறிப்பிட்ட ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது அருகில் உள்ள கிராமமான பெரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மரணம் 1442; 270 அங்கவீனம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இதுவரை சண்டையில் கொல்லப்பட்டு அல்லது காணாமல்போன, இரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அடம்பனில் குண்டுவீச்சு

(மன்னார்)

அடம்பன் பரப்புக்கடந்தான், குருவில் ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை 8.15 மணியளவில் அகோர விமானக்குண்டுவீச்சு இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரம் எதுவும் தெரியவரவில்லை.

## 'ஈழநாதம்' முதல் ஆண்டு நிறைவு

# போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் முதலாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப் படப் போட்டி (Cartoon), கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி என்பனவற்றை நடாத்த முன் வந்துள்ளது இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

★ கருத்துப் படங்கள் (Cartoon)
★ சிறுகதை
★ கவிதை
★ வாசகர் கடிதங்கள்.

### போட்டியில் கலந்து கொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை.

★ படைப்புக்கள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.

★ கருத்துப் படங்கள் 15 செ.மீ x 12 செ.மீ அளவுள்ள அட்டையில் கறுப்பு வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில், தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ வாசகர் கடிதங்கள் இதுவரை வெளியான ஈழநாதம் இதழ் பற்றிய விமர்சனபூர்வமானவையாக கொண்டதாக அமைய வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

★ ஆக்கங்கள், இதற்குமுன் பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் பெப்ரவரி பத்தாம் திகதிக்குப் பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்திற் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத்திகதி நீடிக்கப்பட மாட்டாது என்பதுடன், பிந்திக் கிடைப்பவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவும் மாட்டாது.

★ போட்டி முடிவுகள் யாவும் 17-02-1991 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும். முதல் ஆண்டு நிறைவு நாளில் முதலாவது பரிசு பெறும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

★ ஒவ்வொரு துறையிலும் தகுதியானது எனத் தேர்ந்தெடுக்கப்படுபவை ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு முதல் ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம் ஆண்டு நிறைவுப் போட்டி' என கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் குறிப்பிட்டு;

ஆசிரியர்
'ஈழநாதம்'
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக விஞ்ஞானிகள் ஒன்றியத்தின் விதிமுறைகள் உருவாக்குதல் பற்றிய கருத்தரங்கு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை யாழ் பல்கலைக் கழக பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெற உள்ளது. இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும்படி விஞ்ஞானிகள் கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள்.


## வரி விளம்பரம்

கொம்பியூட்டர் கல்வி
Computer Programming in Basic Language சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் 02-02-91 10-30 a. m Book-Keeping, Short Hand & Typing வகுப்புகள் நடைபெறுகின்றன. School of Business Administration 16, 3rd Cross Street, Jaffna. (B-1948)

போட்டோஸ்ரற்
நல்லூரில் தரமான, தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும் கறுப்பு வெள்ளை புகைப்படங்களுக்கும் நாடுங்கள். சித்ராலயா, 351, கோயில் வீதி, நல்லூர். (கோயில் வீதியில் கம்பன் கோட்டம் முன்பாக) (B/1941)

## நஷனல் அக்கடமி

பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

க. பொ. த. சாதாரணம் (1990)

மாணவர் நலன்கருதி மாதிரிப் பரீட்சை சகல பாடங்களுக்கும் நடைபெறும்.

12-04-1991 க்கு முன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அதிபர்
க. தளையரட்ணம்.

(R-1959)

DHL WORLDWIDE EXPRESS

## வெளிநாட்டுக் கடிதங்கள்

உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நாடுகளிலேயே தபாலில் சேர்க்கப்படும்.

விபரங்களுக்கு:

Cosmos Marketing Services
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (B-1940)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 20 - 10 - 1957
இறப்பு 01 - 02 - 1989

### எம். ருக்குமணி (தவமணி)

மறைப்பு: 10-01-1989

ஆண்டுகள் இரண்டு நீ எனை ஆண்டு
மீண்டுமொரு விடியலுக்காய் படி
தாண்டிப் பறந்திட்டாய் தை பத்தாம்நாள்
வேண்டிப் பல இரந்திட்ட போதும் உயிர்
பிரிந்திட்ட நாள் நினைக்கின்றேன்
மாண்ட உடலிலும் எனது முகவரி
உனக்காக நானென்றால் உளறி இருப்பேன்
இந்திய நாய்களிடம் அவர் வரைந்திட்ட கோலமதில்
எனக்காக எத்தனை இரவுகள் விழித்திருந்து
சிந்திய கண்ணீரில் இட்ட முத்தமும் உப்பானது
எனை மீட்கவெனவந்து நீயே மாட்டிக்கொண்டாய்!
மரணமும் வித்தியாசமானது மாற்றமுமில்லை
மரணத்துக்காய் எனைத் துணைக்கழைத்தாய்!
ஆனாலும் உனைப் பிரித்ததும் அதுதான் உன்
விடுதலைக்காய் அலைந்திட்டேன் அன்று இன்று
அன்பு அத்தான் உனது ஆத்ம சாந்திக்காய்
மண்ணுக்காய், மக்களுக்காய் சுதந்திரம்காண
ஓடி ஓயும்போது புதைகிறேன் உன்னுடன்!

உன் பிரிவால் துயருறும்
எம். ருக்குநாசன்
(கணவர்)

அம்பாள் வீதி,
முள்ளிவளை.

(B/1957)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



தாயின் மடியில் 2 - 3 - 75
தாயக மீட்பில் 1 - 9 - 90

முல்லைத்தீவு இராணுவ முகாம் நேரடி மோதலில் வீரமரணமடைந்த இளம்புலி

### ரனீஸ்

(சுஜீகரன் சிவயோகநாதன்)

செங்குந்தா இந்துக் கல்லூரியின் சாரண அணித் தலைவன்

தமிழன் தளம் அமைத்து வாழ
களம் அமைத்துப்போர் செய்த
இளம் புலி வீரா - இனி
சுஜி என்றழைக்கும் குரல் கேட்குமா? வீரனே!
புயலுக்கு அஞ்சாத புண்ணியனே
பூத்திருக்கும் வயதில் நீ
புரிந்த சாதனையா இங்கு
புரியாத வயதினிலே களம்கண்ட வீரனே
முல்லை நகரில் எதிரியின் பாசறையை
நொருக்கிட உயிர் கொடுத்த வாணனே
கல்வியங்காட்டு ஈரந்து வேங்கையுடன்
நீரங்கு சேர்ந்த எம் வீரனே
செங்குந்தா இந்து மாணவனே
சாரண அணித் தலைவனே
புலிப்படை வீரனே
தமிழீனத்தின் விடுதலைப் பாதையில்
நீர் படைத்த வரலாறு
மறக்க முடியுமா எம் சந்ததி
பிறக்குமடா தம்பி தமிழீழம்
மலரும் அண்ணா உன் கனவு.

மற்றும் இவருடன் வீரமரணமடைந்த 36 போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்.

ரனீஸ் வீதி,
கல்வியங்காடு.

பெற்றோர், அண்ணா, அக்கா, தங்கைமார், நண்பர்கள்.

(R-1062)

## நினைவு கூருகின்றோம்!

### பெப்ரவரி 1

1985ஆம் ஆண்டு பள்ளமடுவில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் வீரமரணமடைந்த

**2ஆம் லெப். பீரிஸ்** (ம. ஞானப்பிரகாசம் - கர்த்தர் கோவிலடி, பரப்புக்கடந்தான்)

**ஜெராட்** (கா. இராசலிங்கம் - மன்னார்)

1986ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

**ஈசன்** (வ. விக்னேஸ்வரன் - தண்ணீரூற்று)

1987ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

**செந்தூரன்** (சி. சத்தியநாதன் - திருப்பழுகாமம்)

1988ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

**எஸ். பி.** (சா. றேமசினா - காரைதீவு)

1987இல் மன்னார் பண்டிவிரிச்சானில் வீரமரணமடைந்த

**குணம்** (செ. ரவீந்திரராஜா - செட்டிகுளம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

வாழ்ந்த காலத்தில்
தாழ்வுற்ற நம் இனத்தை
தலை நிமிர வைப்பதற்கே
விலை கொடுத்தீர் நும் உயிரை! - நாம்
வாழும் காலத்தின் வரலாறு
எழுதும் நும் - தியாகம் - வீரம்
விழிநீரைச் சொரிவதனால்
தீராது சோகம்
பழி தீர்க்கச் சபதங்கள் ஏற்போம்
தாயக விடுதலையில்
இத்தரணி மகிழட்டும்!

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-1906)

## ★ சிந்தனைக்கு ★

அச்சம் மனதில் செயல்திறனையும், ஆய்வாற்றலையும் பறிப்பதுபோல் வேறெந்த உணர்ச்சியும் செய்யாது.

— எட்மண்பர்க்


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 01-02-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2288
த.பெ.எண் 05


## அஞ்சினர்க்குச் சத மரணம்

மத்தியில் ஆட்சி அமைக்க முற்பட்டபோது இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் அதன் தோழமைக் கட்சியான அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் வழங்கிய வாக்குறுதியை சந்திரசேகர் நிறைவேற்றிவிட்டார். இதன் மூலம் மத்தியில் மொத்த பாராளுமன்ற ஆசனங்களில் 10 சதவீதம் வரையில் மட்டுமே கொண்டுள்ள சிறுபான்மை அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பெரும்பான்மை அரசாங்கத்தைக் கலைத்து விட்டது.

அதேவேளை இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனும் தனது கட்சிக்கான நன்றிக் கடனைத் தெரிவிப்பதற்காக இரண்டாவது தடவையாக இந்திய அரசியற் சட்டத்தை அவமதித்து விட்டார். முதலாவது மிகவும் சிறுபான்மையானதும், கட்சிகளின் வரிசையில் நாலாவது இடத்தை வகித்ததுமான ஒரு கட்சியை ஆட்சி அமைக்க அழைத்ததின் மூலம் அவமதித்தார். இரண்டாவதாக பலமான காரணம் எதுவுமின்றி தமிழக சட்ட சபையைக் கலைத்ததன் மூலம் மீறியுள்ளார்.

இந்நிலையில், இந்தத் தி.மு.க. மாநில அரசாங்கம் கலைக்கப்பட்டது தொடர்பாக ஜனதா தளத் தலைவர் எஸ். ஆர். பொம்மை கூறிய "இது ஒரு ஜனநாயகப் படுகொலை" என்ற கூற்று முற்றிலும் பொருத்தப்பாடு உடையதாகும்.

சந்திரசேகர் அமைச்சரவை ஆட்சிக்கு வந்தபோது மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் ஆட்சியில்லாத மாநிலங்களில் உள்ள அரசாங்கங்களைக் கலைத்தார். ஆனால் தமிழகத்தில் உடன் ஆட்சிக் கவிழ்ப்புச் செய்ய போதிய காரணங்கள் இல்லாமையும், அது தனது கடைசித் துரும்புச்சீட்டு என அவர் கருதுவதினால்போலும் சற்றுத் தாமதத்தை சந்திரசேகர் ஏற்படுத்தி வந்தார்.

ஆனால், இந்திரா காங்கிரஸிடம் இருந்து அவருக்குக் கொடுக்கப்பட்ட நெருக்கடிகளினால் அவரால் உடனடியாக ஆட்சிக் கவிழ்ப்பிற்கு உடன்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது அல்லது மத்தியில் தனது ஆட்சியே கவிழ்ந்து விடும் என்ற நிலை தோன்றியது சந்திரசேகருக்கு.

சந்திரசேகர் அமைச்சரவை பதவி ஏற்றபின் அதுபற்றி பெரியளவில் வாய் ஏதும் திறக்காத இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி நான்கு தினங்களுக்கு முன் அமெரிக்கப் போர் விமானங்களுக்கு பம்பாய் விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்புவது தொடர்பாக வலுவான கண்டனம் ஒன்றைத் தெரிவித்தார். இந்தக் கண்டனத்தில் சந்திரசேகர் அரசாங்கம் சிறுபான்மை அரசாங்கம் என்பதை மறந்துவிடக்கூடாது என்பதை வலியுறுத்தியிருந்தார்.

# உடைந்த வீடுகளில் உடையாத உள்ளங்கள்

**ஐந்தாவது சம்பவம்**

ஐந்தாவது சம்பவம் 1987-ம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி இடம்பெற்றது. இது சிறிலங்கா இராணுவ வட்டாரங்களால் Operation Liberation என அழைக்கப்பட்டது. ... மந்த இங்கிலாந்து 1919இல் ஜெனரல் டயர் தலைமையில் பெரிய இன அழிவை மேற்கொண்டது பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரஸில் ஜாலியான் - வாலாபாக் என்னும் இடத்தில் நடந்த இப்படு கொலைகள் அந்த இடத்தின் பெயராலேயே குறிப்பிடப்படுகிறது. அதேபோல் அல்ஜீரியாவை ஆக்கிரமித்திருந்த பிரெஞ்சுப் படைகள் (கெஸ்பார் விடுதலைப் போராட்டத்தை நசுக்க) கேணல் மத்யூ தலைமையில் அந்த படுகொலைகளை நடத்தின. வியட்நாமை ஆக்கிரமித்திருந்த அமெரிக்கா மைலாய் என்ற இடத்தில் நடத்திய படுகொலை மைலாய் படுகொலை என அழைக்கப்படுகிறது. சுமார் 300 பேரளவில் கொலையுண்ட இச்சம்பவத்திற்கு லெப்டினன்ட் வில்லியம் கெலி என்பவன் தலைமை தாங்கியிருந்தான். இந்த வரிசையில் ஒரு ஜாலியன் வாலாபாக்காக, ஒரு மைலாயாக வல்வெட்டித்துறை மாறியது. ஜெனரல் டயர், கேணல் மத்தியூ, லெப்டினன்ட் வில்லியம் கெலி வரிசையில் பிரிகேடியர் அக்கரி பிரசாத்தின் பெயர் உலக வரலாற்றில் பதிந்து கொண்டது. இப்படுகொலைகள் "வல்வைப் படுகொலைகள்" என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்தது. வல்வை ந. அனந்தராஜ் என்பவர் இதை எழுதியிருந்தார்.

இந் நடவடிக்கையின்போது வடமராட்சி முழுவதுமே பிணக்காடாகியது. இதில் வல்வெட்டித்துறையும் தப்ப முடியவில்லை. கற்பழிப்பு, கொள்ளை அனைத்துமே நடைபெற்றன. கொள்ளையிடப்பட்ட நகைகள், பொருள்கள் பத்திரமாக தென்னிலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டன. கொற்றியாவத்தை என்னும் பகுதி 'கொட்டியாவத்தை' என இனம் காட்டப்பட்டதால் அங்குள்ள அனைத்து இளைஞர்களுமே கொல்லப்பட்டனர். இப்படுகொலைகள் எழுத்து வடிவம் பெறாதது துரதிர்ஷ்டவசமானதே.

இந்நடவடிக்கை இந்திய அரசின் ஆசீர்வாதத்துடனேயே மேற்கொள்ளப்பட்டது. இத்தருணத்தில் சிறிலங்காவின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி இவ்விடயம் தொடர்பாக "ஒப்புதல் வாக்குமூலம்" அளித்திருந்தார். இச்சம்பவத்தைத் தொடர்ந்து சிலகாலம் இந்திய அரசு தான் விரும்பியபடி வரலாற்றின் போக்கை மாற்ற முயற்சித்தது.

**ஆறாவது சம்பவம்**

ஆறாவது சம்பவத்தில் சூத்திரதாரிகள் மட்டும் மாறியிருந்தனர். இவ்வூர் காலமும் நடைபெற்ற சம்பவங்களில் மூர்க்கத்தனத்துடன் செயற்பட்ட சிறிலங்காப் படையினர் தமது முகாமுக்குள் பந்தடித்து விளையாடிக் கொண்டிருக்கையில், அவர்கள் செய்து வந்த "பணியை" இந்திய இராணுவம் பொறுப்பேற்றது. வல்வை மண்ணில் காலடி பதித்த மேஜர் சுந்தர் சிங் உட்பட ஆறு இராணுவத்தினர் மோதலில் இறந்ததைத் தொடர்ந்து வல்வையைத் தீர்த்துக்கட்ட கங்கணம் கட்டியது இந்தியப் படை. யாக்கரை முகாம் பொறுப்பதிகாரியான பிரிகேடியர் அக்கரி பிரசாத் தலைமையில் வல்வைநகர் பழிவாங்கப்பட்டது. 1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2, 3, 4ஆம் திகதிகளில் நடைபெற்ற இப்படு

**ஏழாவது சம்பவம்**

ஏழாவது சம்பவமே கடந்த ஜனவரி மாதம் 20, 21, 22, 23 ஆம் திகதிகளில் நடைபெற்றது. 20ஆம் திகதி 93, 21ஆம் திகதி 78, 22ஆம் திகதி 58, 23ஆம் திகதி 20 என்று விமானக் குண்டுகள் வல்வை மண்ணில் வீழ்ந்தன. விமானங்கள் மாறி மாறி அவ்ரோ, ஹெலி, Y-12... என்று ஒரு நேர அட்டவணை போட்டு தொடர்ச்சியாகத் தாக்குதலை மேற்கொண்டன. ஒரு குழு சென்று அந்த குழ...

வீடுகளே பெரும்பாலும் முழுமையாகத் தகர்ந்திருந்தன. எதிர்ப்புறத்தில் தகர்ந்திருந்த ஒரு பெரிய வீட்டிற்குச் சென்றோம். வீதிக்கு அண்மையில் பாரிய குழி ஒன்று காணப்பட்டது. தகர்ந்த வீட்டில் எஞ்சியிருந்த சுவர் ஒன்றை அவதானித்தேன். ஹிந்தியில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. இலங்கை இராணுவத்தின் சின்னமும் (அழிவு) இந்திய இராணுவத்தின் சின்னமும் (ஹிந்தி எழுத்துக்கள்) நாம் இன்னும் விடுதலை பெறவில்லை என்ற கசப்பான உண்மையை உணர்த்தியது. அங்கே ஒரு காகம் இருந்தது; சொண்டில் எதையோ கௌவிக் கொண்டிருந்தது: மீன்பிடிக் கிராமம் ஆதலால் மீனாக இருக்கும் என நினைத்தேன். கூர்ந்து கவனித்த போதுதான் அது இறைச்சி எனப் புரிந்தது: இறந்தவர்களின் உடல்கள் அவசர அவசரமாக அந்த இடத்திலேயே புதைக்கப்பட்டன என்ற செய்தி நினைவுக்கு வந்தது. 249 குண்டுகள் போடப்பட்டதில் சிதறிய உடல்களின் பாகமே அது என்பதைப் புரிய அதிக நேரம் எடுக்கவில்லை.

அடுத்த வீட்டுக்குச் சென்றோம். அந்த வீடு கணிசமான அளவே சேதப்பட்டிருந்தது; சுவரில் ஒரு தம்பதியினரின் படம் மாட்டப்பட்டிருந்தது: "மலரும் நினைவுகளுக்காக" மாட்டப்பட்டிருந்த அந்தப் படத்தில் உள்ள பெண்ணின் கழுத்தில் ஏராளமான நகைகள் அடுக்கப்பட்டிருந்தன; பக்கத்தில் இருப்பவரின் முகம் எங்கேயோ பார்த்த ஞாபகம். எனக்கு அருகில் வந்த ஒரு பையனைக் கேட்டேன். "தம்பி படத்தில் இருப்பது யார்?" "பேராசிரியர் சிவத்தம்பியும் அவரது மனைவியும்" என்றான் பையன்.

(தொடரும்)

> தகர்ந்த வீட்டில் எஞ்சியிருந்த சுவர் ஒன்றை அவதானித்தேன். ஹிந்தியில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. இலங்கை இராணுவத்தின் சின்னமும் (அழிவு) இந்திய இராணுவத்தின் சின்னமும் (ஹிந்தி எழுத்துக்கள்) நாம் இன்னும் விடுதலை பெறவில்லை என்ற கசப்பான உண்மையை உணர்த்தியது.

## விவசாய ஊக்குவிப்பு

அதேவேளை இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனும் தனது கட்சிக்கான நன்றிக் கடனைத் தெரிவிப்பதற்காக இரண்டாவது தடவையாக இந்திய அரசியற் சட்டத்தை அவமதித்து விட்டார். முதலாவது மிகவும் சிறுபான்மையானதும், கட்சிகளின் வரிசையில் நாலாவது இடத்தை வகித்ததுமான ஒரு கட்சியை ஆட்சி அமைக்க அழைத்ததின் மூலம் அவமதித்தார். இரண்டாவதாக பலமான காரணம் எதுவுமின்றி தமிழக சட்ட சபையைக் கலைத்ததன் மூலம் மீறியுள்ளார்.

இந்நிலையில், இந்தத் தி.மு.க. மாநில அரசாங்கம் கலைக்கப்பட்டது தொடர்பாக ஜனதா தளத் தலைவர் எஸ். ஆர். பொம்மை கூறிய "இது ஒரு ஜனநாயகப் படுகொலை" என்ற கூற்று முற்றிலும் பொருத்தப்பாடு உடையதாகும்.

சந்திரசேகர் அமைச்சரவை ஆட்சிக்கு வந்தபோது மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் ஆட்சியில்லாத மாநிலங்களில் உள்ள அரசாங்கங்களைக் கலைத்தார். ஆனால் தமிழகத்தில் உடன் ஆட்சிக் கவிழ்ப்புச் செய்ய போதிய காரணங்கள் இல்லாமையும், அது தனது கடைசித் துரும்புச்சீட்டு என அவர் கருதுவதினாலோ பொலும் சற்றுத் தாமதத்தை சந்திரசேகர் ஏற்படுத்தி வந்தார்.

ஆனால், இந்திரா காங்கிரஸிடம் இருந்து அவருக்குக் கொடுக்கப்பட்ட நெருக்கடிகளினால் அவரால் உடனடியாக ஆட்சிக் கவிழ்ப்பிற்கு உடன்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது அல்லது மத்தியில் தனது ஆட்சியே கவிழ்ந்து விடும் என்ற நிலை தோன்றியது சந்திரசேகருக்கு.

சந்திரசேகர் அமைச்சரவை பதவி ஏற்றபின் அதுபற்றி பெரியளவில் வாய் ஏதும் திறக்காத இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி நான்கு தினங்களுக்கு முன் அமெரிக்கப் போர் விமானங்களுக்கு பம்பாய் விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்புவது தொடர்பாக வலுவான கண்டனம் ஒன்றைத் தெரிவித்தார். இந்தக் கண்டனத்தில் சந்திரசேகர் அரசாங்கம் சிறுபான்மை அரசாங்கம் என்பதை மறந்துவிடக்கூடாது என்பதை வலியுறுத்தியிருந்தார்.

இந்த எச்சரிக்கையை ஒருவேளை சந்திரசேகர் எதிர்பார்க்காமலும் இருந்திருக்கலாம். ஏனெனில் இந்திய அமெரிக்க உறவில் நெருக்கம் முன் எப்பொழுதும் இல்லாத அளவில் ராஜீவ்காந்தி ஆட்சியில் இருக்கும் போதே ஏற்பட்டதாகும். இந்த நிலையில் ராஜீவிடம் இருந்து வந்த எச்சரிக்கையும், சிறுபான்மை அரசாங்கம் என்ற மிரட்டலும் எதற்காக வந்தவை என்பதைச் சந்திரசேகர் புரிந்ததனால் போலும் தனது கடைசித் துரும்புச்சீட்டையும் சந்திரசேகர் பாவித்துள்ளார். தமிழக அரசைக் கலைத்ததன் மூலம் இந்திரா காங்கிரஸ் சந்திரசேகரை ஆட்சியில் அமர்த்திய சகல நோக்கங்களையும் நிறைவேற்றிவிட்டது. இனி சந்திரசேகர் தமது ஆட்சிக்காலத்தை நாட்களாக, மணித்தியாலங்களாக எண்ணுவதைத் தவிர வேறுவழி அவருக்கு இருக்கப் போவதில்லை.

அதேவேளை மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்ட சபையில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைக்கொண்ட தி. மு. க. அரசாங்கம் சிறுபான்மை மத்திய அரசாங்கத்தின் மிரட்டல்களுக்குப் பணிந்து கொண்டதும், விளக்கங்கள் அளிக்க முற்பட்டதும் தவறாகும்.

சிறுபான்மை அரசாங்கத்தை நம்பியதைவிட தமக்கு வாக்களித்த மக்களை தி. மு. க. அரசாங்கம் நம்பி இருந்திருத்தல் வேண்டும். தமது ஆட்சி நிலைக்க வேண்டும் என்பதற்காக கைப் பொம்மையான ஒரு சிறுபான்மை அரசாங்கத்தை தாஜா செய்ய தமிழக முதலமைச்சர் கருணாநிதி முயற்சித்திருக்க வேண்டியதில்லை. மத்திய அரசின் மிரட்டல்களுக்கு எதிராக மக்களைச் சந்திக்கத் தயார் என சவால் விட்டிருக்க வேண்டும்.

அதைவிடுத்து ஆட்சி அதிகாரத்தில் ஒட்டிக்கொண்டு இருப்பதுதான் நோக்கமாக இருந்தால் இவ்வாறான நிகழ்வுகள் தவிர்க்கமுடியாதவைதான்.

---

னதே.

இந்நடவடிக்கை இந்திய அரசின் ஆசிர்வாதத்துடனேயே மேற்கொள்ளப்பட்டது. பிறிதொரு சந்தர்ப்பத்தில் சிறிலங்காவின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத்முதலி இவ்விடயம் தொடர்பாக "ஒப்புதல் வாக்குமூலம்" அளித்திருந்தார். இச்சம்பவத்தைத் தொடர்ந்து சிலகாலம் இந்திய அரசு தான் விரும்பிய படி வரலாற்றின் போக்கை மாற்ற முயற்சித்தது.

## ஆறாவது சம்பவம்

ஆறாவது சம்பவத்தில் குற்றவாளிகள் மட்டும் மாறியிருந்தனர். இவ்வளவு காலமும் நடைபெற்ற சம்பவங்களில் மூர்க்கத்தனத்துடன் செயற்பட்ட சிறிலங்காப் படையினர் தமது முகாமுக்குள் பதுங்கியிருந்து விளையாடிக் கொண்டிருக்கையில், அவர்கள் செய்து வந்த "பணியை" இந்திய இராணுவம் பொறுப்பேற்றது. வல்வை மண்ணில் காலடி பதித்த மேஜர் சுந்தர்சிங் உட்பட ஆறு இராணுவத்தினர் மோதலில் இறந்ததைத் தொடர்ந்து வல்வையைத் தீர்த்துக்கட்டக் கங்கணம் கட்டியது இந்திய(ப்)ப் படை. யாக்கரை முகாம் பொறுப்பதிகாரியான பிரிகேடியர் சங்கர் பிரசாத் தலைமையில் வல்வைநகர் பழிவாங்கப்பட்டது. 1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2, 3, 4ஆம் திகதிகளில் நடைபெற்ற இப்படுகொலைகளில் மொத்தம் 63 பேர் கொல்லப்பட்டனர். 45 வர்த்தக நிலையங்கள், 123 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. சில கடைகளில் முதலாளிமாரை உயிருடன் கடைகளுள் போட்டுத் தீமூட்டினர் இந்திய இராணுவத்தினர். இறந்தவர்களது சடலங்கள் சில அவரவர் வீட்டிலேயே மனைவிமாரினால் தகனம் செய்யப்பட்டன. இதுவரை காலமும் சிறிலங்கா இராணுவத்தால் வீதிகள், வயல்கள் தான் மயானமாகியிருந்தன. இந்திய இராணுவம் வீடுகளையே மயானமாக்கியது. 15 திருமணமான பெண்கள் கற்பழிக்கப்பட்டாரிலும் கற்பழிக்கப்பட்ட இளம் பெண்களின் தொகை அவர்களின் எதிர்கால வாழ்வு கருதி வெளியிடப்படவில்லை. சர்வதேச மன்னிப்புச்சபை மற்றும் பல் வேறு வழிகளில் இந்நிகழ்வுகள் வெளியுலகத்திற்குத் தெரியவந்தன. "இந்தியா தனக்கென ஒரு மைலாயை ஈழத்தில் தேடிக்கொண்டது. அதுதான் வல்வெட்டித்துறை" என்று தி சண்டே டெலிகிராப் பில் குறிப்பிட்டார் டேவிட் ஹவுஸ்கோ.

உலகத்தில் ஆக்கிரமிப்புச் செய்யும் படைகள் எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதை இந்தியப் படையும் நிரூபித்தது. இந்தியாவை ஆக்கிர

> தகர்ந்த வீட்டில் எஞ்சியிருந்த சுவர் ஒன்றை அவதானித்தேன். ஹிந்தியில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. இலங்கை இராணுவத்தின் சின்னமும் (அழிவு) இந்திய இராணுவத்தின் சின்னமும் (ஹிந்தி எழுத்துக்கள்) நாம் இன்னும் விடுதலை பெறவில்லை என்ற கசப்பான உண்மையை உணர்த்தியது.

மை தாங்கியிருந்தான். இந்த வரிசையில் ஒரு ஜாலியன் வாலாபாக்காக, ஒரு மைலாயாக வல்வெட்டித்துறை மாறியது. ஜெனரல் டயர், கேணல் கல்லி, லெப்டினன்ட் வில்லியம் கெலி வரிசையில் பிரிகேடியர் சங்கர் பிரசாத்தின் பெயர் உலக வரலாற்றில் பதிந்து கொண்டது. இப்படுகொலைகள் "வல்வைப் படுகொலைகள்" என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்தது. வல்வை ந. அனந்தராஜ் என்பவர் இதை எழுதியிருந்தார்.

## ஏழாவது சம்பவம்

ஏழாவது சம்பவமே கடந்த ஜனவரி மாதம் 20, 21, 22, 23 ஆம் திகதிகளில் நடைபெற்றது. 20 ஆம் திகதி 93, 21 ஆம் திகதி 78, 22 ஆம் திகதி 58, 23 ஆம் திகதி 20 என்று விமானக் குண்டுகள் வல்வை மண்ணில் வீழ்ந்தன. விமானங்கள் மாறி மாறி சியா மாசெட்டி, பூக்காரா, ஹெலி, Y-12... என்று ஒரு நேர அட்டவணை போட்டுத் தொடர்ச்சியாகதாக் குதலை மேற்கொண்டன. ஒரு குழு சென்று அடுத்த குழு வருவதற்கிடையில் கடலில் இருந்து பீரங்கிக் குண்டுகள் ஏவப்பட்டன. மொத்தமாக 24 குண்டுகள் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டன. சுமார் 650 வீடுகள் தகர்ந்தும் சேதமடைந்தும் உள்ளன.

பரதன் குழுவினருடன் நான் சென்றபோது வளை குடாவில் நிற்கும் உணர்வே ஏற்பட்டது. கடைசியில் இருந்து ஒவ்வொன்றாகப் பார்த்து வருவோம் என்று சொன்னார் பரதன். பழைய இராணுவ முகாமுக்கு அப்பால் இருந்து பார்த்து வரப் போனோம்.

குண்டுவீச்சுக்கு இலக்கான ஒரு மாடி வீடு தலைகுனிந்து வணக்கம் செலுத்தியது.

பாரிய சேதம் ஏற்படாத சில வீடுகளில் இருந்து மக்கள் இடம்பெயர்வு வேலைக்காக வெளியே வந்தனர். இடிந்த கட்டடங்களை அள்ளிக் கொட்டிக் கொண்டிருந்தார்கள். இலயார் தூரத்தில் வீடுகள் முழுமையாகத் தகர்ந்திருந்தும் அவர்கள் நம்பிக்கையை இழக்காமல் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதேவேளை முற்றாகத் தகர்ந்த வீட்டுச் சொந்தக்காரர்களின் முகத்தில் இருக்கவேண்டிய சோகத்தைக் காணமுடியவில்லை. கடற்கரைக்குப் பக்கத்தில் இருந்த குண்டுகள் போடப்பட்டதில் சிதறிய உடல்களின் பாகமே அது என்பதைப் புரிய அதிக நேரம் எடுக்கவில்லை.

அடுத்த வீட்டுக்குச் சென்றோம். அந்த வீடு கணிசமான அளவே சேதப்பட்டிருந்தது. சுவரில் ஒரு தம்பதியினரின் படம் மாட்டப்பட்டிருந்தது. "மலரும் நினைவுகளுக்காக" மாட்டப்பட்டிருந்த அந்தப் படத்தில் உள்ள பெண்ணின் கழுத்தில் ஏராளமான நகைகள் அடுக்கப்பட்டிருந்தன. பக்கத்தில் இருப்பவரின் முகம் எங்கேயோ பார்த்த ஞாபகம். எனக்கு அருகில் வந்த ஒரு பையனைக் கேட்டேன். "தம்பி படத்தில் இருப்பது யார்?" "பேராசிரியர் இவ்த்தம்பியும் அவரது மனைவியும்" என்றான் பையன்.

(தொடரும்)

---

# விவசாய ஊக்குவிப்பு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களை பயிர்ச்செய்கை, மரநடுகை, வீட்டுத்தோட்டம் ஆகிய விவசாய முயற்சிகளில் ஊக்குவிப்பதற்கான கலந்துரையாடல்கள் விவசாய ஆசிரியர்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இராமநாதன் கல்லூரியிலும், 8 ஆம் திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் 15 ஆம் திகதி பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியிலும், 19 ஆம் திகதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும், 22 ஆம் திகதி வேலணை துரைசாமி மத்திய மகாவித்தியாலயத்திலும் இக்கலந்துரையாடல்கள் இடம்பெறும். விவசாயம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் சமுகம் தருமாறு விவசாயக் கல்வி அதிகாரி கேட்டுள்ளார்.

(க)

# ஓய்வூதியம்

ஒக்டோபர் மாதத்துக்குரிய ஓய்வூதியப் பணத்தை இதுவரை பெற்றுக் கொள்ளாத ஓய்வூதியகாரர்கள் தத்தமது இலங்கை வங்கி கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம் என்று இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

(க)

இந்தியப் பிரதமர் சந்திரசேகர்

# எமது ஆட்சியைக் கலைத்ததினால் தனது ஆட்சியைக் காப்பாற்றினார்

-கருணாநிதி

(சென்னை)

"எனது தலைமையிலான ஆட்சியை கவிழ்த்ததன் மூலம் தற்காலிகமாக தனது ஆட்சியை காப்பாற்றிக் கொண்டுள்ளார் பிரதமர் சந்திரசேகர். இதற்கு நாங்கள் பயன்பட்டிருக்கிறோம் என்பதில் எனக்கு ஒருவகை திருப்தி தான்" என்று தமிழக முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய மு. கருணாநிதி திராவிட முன்னேற்றக்கழக அரசாங்கத்தை கலைத்தது குறித்து தமது ஆட்சேபத்தை தெரிவித்தார். ஜனநாயக நெறிமுறைகளை காப்பாற்ற பிரதமர் சந்திரசேகர் தவறிவிட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

**பிரபல்ல குமார் மொகந்தா**

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாங்கத்திற்கு எதிராக மத்திய அரசாங்கம் எடுத்த ஜனநாயகத்திற்கு புறம்பான நடவடிக்கை இது என அசாம் கண பரிஷத் தலைவர் பிரபல்ல குமார் மொகந்தா குறிப்பிட்டுள்ளார்.

**செல்வி ஜெயலலிதா**

தேச விரோத ஜனநாயக விரோத தி. மு. க. ஆட்சியை நீக்கியது இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கருதி எடுக்கப்பட்ட மிகவும் தேவையான நடவடிக்கையானதென அ.தி.மு.க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா குறிப்பிட்டார். இந்த நடவடிக்கையானது அ. தி. மு. க. இந்திராகாங்கிரஸ் உள்ளிட்ட ஜனநாயக முற்போக்கு அணிக்குக் கிடைத்த வெற்றி என்றும் குறிப்பிட்டார்.

**புதுக்குடியிருப்பில்**

முகாம் புதுக்குடியிருப்பு), கே. புஸ்பநாதன் (வயது 34 4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு), இ. விவேகானந்தன் (வயது18 அகதிமுகாம்புது குடியிருப்பு), பிரதீபன் (வயது 10 4ஆம்வட்டாரம் புதுக்குடியிருப்பு), எஸ். ஜெகநாதன் (வயது 43 புதுக்குடியிருப்பு முல்லைத் தீவு), தியாகராசா (வயது20 புதுக்குடியிருப்பு), ம. மயில்வாகனம் (வயது 36 8ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு), ம. தர்மராஜா (வயது 28 அகதிமுகாம் புதுக்குடியிருப்பு) ப. நகநந்தினி (வயது 6 மடுச்சந்தி ஒட்டுசுட்டான்), நாகமணி (வயது 56 புதுக்குடியிருப்பு), பாஸ்கரன் (வயது 12 புதுக்குடியிருப்பு), செல்லம்மா (வயது 45 கரணவாய்), க. குணராஜா (வயது 34 முத்தையன்கட்டு ஒட்டுசுட்டான்), பிரதீபன் (வயது 10 புதுக்குடியிருப்பு ஆகியோரே படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாகும்.

மேலும் காயமடைந்த பலர் கிளிநொச்சி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (லோ) (ஈ) (85)

**பத்தரைக்**

தெரியவில்லையென விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அதேவேளை மட்டக்களப்பு

**14 தமிழ் வைத்திய**

காது.மூக்கு.தொண்டை தொடர்பான நிபுணர் இருவரும், குழந்தைப் பேற்றுக்காக இருவரும், கண்சிகிச்சை நிபுணர் இருவரும், மருத்துவ நிபுணர்கள (Physician) மூவரும் இவ்வாறு கொழும்பில் கடமையாற்றுகிறார்கள்.

கொழும்பில் ஏறக்குறைய 80க்கும் மேற்பட்ட வைத்திய நிபுணர்கள் கடமையாற்றுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**அமெரிக்கா**

இராணுவ நடவடிக்கைகளையும் இலங்கை அரசு ஆதரிக்கவில்லை எனினும் அணிசாரா இயக்கத்தின் முக்கிய உறுப்பு நாடாகிய இந்தியாவில் எரிபொருள் நிரப்பும் வசதி செய்யப்பட்டதை அடுத்து இலங்கையும் எரிபொருள் நிரப்ப முன்வந்திருப்பது அணிசாரா இயக்கத்தின் போக்கு வளைகுடாப் போரில் எத்தகைய வகையில் அமையக் கூடும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக அமையும் என்று பி.பி.ஸி. கூறியுள்ளது.

**திடீர்**

யார்குளம் என்னும் இடத்தில் தமது வீட்டில் தங்கியிருந்த சிகிகாரம் என்னும் வயோதிபருடன் மேலும் சிலர் காயம் அடைந்தனர்.

சில வீடுகளும் இதனால் பாதிப்படைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

**குண்டு**

இக் குண்டுகளைத் தயாரிப்பதில் முனைந்த திரு. மூத்துராசா (30) என்பவரே படுகாயமுற்று யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் ஆவார் (85)

**25 தமிழர்**

வாய்க்கால் ஆற்றைக் கடக்க முற்பட்ட அப்பாவிப் பொதுமக்களே இவ்வாறு ஆற்று வெள்ளத்தால் அள்ளிச்செல்லப்பட்ட பரிதாபகரமான சம்பவம் நிகழ்ந்தது.

இச்சம்பவத்தில் அழகையா புவனேஸ்வரன் (20) செங்கலடி, துரைராசா சிவகுமார் (25) வந்தாறுமூலை, பாலு (16) கிரான், சண்முகநாதன் (35) ஆரையம்பதி, இருதயராசா (35) அல்லை வீதி, கந்தளாய் ஆகியோரும் மூழ்கிஇறந்தவர்களில் அடங்குவர்.

அதேவேளை மகிழவெட்டுவான் கிராமத்தை அடைந்த இராணுவத்தினர் 37 குடிசைகளையும், 35 கடைகளையும் பொருள்களுடன் சேர்த்துத் தீயிட்டுக்கொளுத்தினர். அத்தோடு மகிழவெட்டுவான் பாடசாலையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வேண்டுதலின் பேரில் அமைக்கப்பட்ட வைத்தியசாலைக் கட்டடத்தையும் குண்டுவைத்துத் தகர்த்தனர். 50 சைக்கிள்களையும் தீயிட்டுக்கொளுத்தினர்.

மேலும் பாவமடு வயல் வெளிகளுக்குள் விதைப்பிற்காகச் சேமித்துவைக்கப்பட்ட நெல் மூடைகளோடு 10 வாடி



## தி. மு. க. அரசு கலைப்பு; ஐம்பது பஸ்கள் சேதம்

தமிழகத்தில் தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆங்காங்கு சிறு வன்முறைச்சம்பவங்கள் இடம் பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

50பஸ்கள்சேதமாக்கப்பட்டதாகவும், இதில் 15 பஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் சில புகையிரத நிலையங்களுக்குத் தீவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், சில புகைவண்டிப்பெட்டிகளுக்கு தீவைக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை பொலிஸார் சுட்டதில் சிலர் காயமடைந்ததாகவும், 1700 பேர் கைது செய்யப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# 15 ஆம் நாள் போர்

★ சவூதி அரேபியாவின் பட்டினமான கல்பிரியை கைப்பற்றிய ஈராக் படைகள் தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டிலேயே அந்தப் பட்டினத்தை வைத்திருக்கின்றன. சுமார் நூறு ஈராக்கிய இராணுவத்தினர் அங்கு நிலைகொண்டுள்ளனர் என பாக்தாத் வானொலி தெரிவித்தது. நேற்று முன்தினம் இரவிற்குப்பின்னர் நான்கு தடவைகள் அந்தப் பட்டினத்தில் இருந்து ஈராக்கிய படைகளை ஊடறுத்துத் தாக்கியதாக கூட்டுப்படைத் தளபதி தெரிவித்தார்.

★ ஈராக்கால் கைப்பற்றப்பட்ட சவூதி அரேபிய நகரத்தை மீண்டும் கைப்பற்றுவதற்காக அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படை 24மணிநேரமும் முனைந்து வருகிறது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

★ இந்தப்போரின்போது அமெரிக்கத் தரப்பில் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், ஈராக்கிய இராணுவத்தினர் பட்டாரியாப் படையின் ஆதரவுடன் சவூதி அரேபிய நகரத்தைக் கைப்பற்றியதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்ததாக பி.பி.ஸி. அறிவித்தது.

சந்து ஒட்டுசுட்டான், [illegible] மணி (வயது 56 புதுக்குடியிருப்பு), பாஸ்கரன் (வயது 12 புதுக்குடியிருப்பு), செல்லம்மா (வயது 45 கரணவாய்), க. குணராஜா (வயது 34 முத்தையன்கட்டு ஒட்டுசுட்டான்), பிரதீபன் (வயது 10 புதுக்குடியிருப்பு ஆகியோரே படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாகும்.

மேலும் காயமடைந்த பலர் கிளிநொச்சி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (லோ) (ச) (85)

பத்தரைக்

தெரியவில்லையென விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் 29ஆம் திகதி நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் ஒரு இராணுவம் மரணமடைந்ததாகவும் நால்வர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இயக்கத்தின் முக்கிய உறுப்பு நாடாகிய இந்தியாவில் எரிபொருள் நிரப்பும் வசதி செய்யப்பட்டதை அடுத்து இலங்கையும் எரிபொருள் நிரப்ப முன்வந்திருப்பது அணிசாரா இயக்கத்தின் போக்கு வளைகுடாப் போரில் எத்தகைய வகையில் அமையக் கூடும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக அமையும் என்று பி.பி.ஸி. கூறியுள்ளது.

திடீர்

யார்குளம் என்னும் இடத்தில் தமது வீட்டில் தங்கியிருந்த சிகாரம் என்னும் வயோதிபருடன் மேலும் சிலர் காயம் அடைந்தனர்.

சில வீடுகளும் இதனால் பாதிப்படைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தின் திடீர் ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி பூந்தோட்டம் பகுதிக்கு அருகில் வாழும் மக்கள் இடம்பெயர்ந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. (டு)

வன்னிப்பிராந்தியத்திலும் நிலைமை கருத்திற்கொண்டு நாம் இன்று முதலாம் திகதியில் இருந்து கீழ்க்குறிப்பிடும் பொருள்களுக்கு நிர்ணயஅடிப்படையில் விலைகளைத் தீர்மானித்து அமுல்படுத்துகின்றோம்.

இவ்வாறு பொருள்களின் விலைக் கட்டுப்பாடு குறித்து வர்த்தகர்களுக்கும் நடமாடும் வியாபாரிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அத்தியாவசிய சேவைக்குழு கடந்த மாதம் 25ஆம் திகதி விடுத்துள்ள முக்கிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த அறிவித்தலை மீறுவோரும், பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபடுவோரும் எம்மால் குற்றவாளியாக இனம் காணப்படுவார்கள் என்றும், சகஜ நிலைமைகளுக்கு ஏற்ப விலைகளில் படிப்படியாக வீழ்ச்சி ஏற்படுத்தப்படும் என்றும் அந்த அறிவித்தலில் கூறப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| அரிசி | 1 கிலோ | ரூ. | 26 | 00 |
| சீனி | 1 கிலோ | ரூ. | 32 | 00 |
| மாவு | 1 கிலோ | ரூ. | 28 | 00 |
| சர்க்கரை | 1 கிலோ | ரூ. | 35 | 00 |
| மண்ணெண்ணெய் | 1 லீற்றர் | ரூ. | 28 | 00 |
| தேங்காயெண்ணெய் | 1 லீற்றர் | ரூ. | 35 | 00 |
| பற்றறி | 1 சோடி | ரூ. | 50 | 00 |
| மரக்கறி வகைகள் | 1 கிலோ ரூ. 10.00 - | | 20 | 00 வரை |
| சவர்க்காரம் | 1 (தனி) | ரூ. | 8 | 50 |
| தேங்காய் | 1 (தனி) ஆகக்கூடியது | ரூ. | 10 | 00 |
| நல்லின மீன் (கடல்மீன்) | 1 கிலோ | ரூ. | 40 | 00 |
| ஆற்று மீன் | 1 கிலோ | ரூ. | 25 | 00 |
| நண்டு | 1 கிலோ | ரூ. | 30 | 00 |
| கறுப்பு இறால் | 1 கிலோ | ரூ. | 60 | 00 |
| வெள்ளை இறால் | 1 கிலோ | ரூ. | 40 | 00 |
| பன்றி இறைச்சி | 1 கிலோ | ரூ. | 25 | 00 |
| மான், மரை இறைச்சி | 1 கிலோ | ரூ. | 30 | 00 |
| தேநீர் | 1 (தனி) | ரூ. | 1 | 50 |
| பால் தேநீர் | 1 (தனி) | ரூ. | 2 | 50 |
| வடை | 1 (தனி) | ரூ. | 2 | 50 |

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ளாய் ஆகியோரும் மூழ்கி இறந்தவர்களில் அடங்குவர்.

அதேவேளை மகிழவெட்டுவான் கிராமத்தை அடைந்த இராணுவத்தினர் 37 குடிசைகளையும், 35 கடைகளையும் பொருள்களுடன் சேர்த்துத் தீயிட்டுக்கொளுத்தினர். அத்தோடு மகிழவெட்டுவான் பாடசாலையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வேண்டுதலின் பேரில் அமைக்கப்பட்ட வைத்தியசாலைக் கட்டடத்தையும் குண்டுவைத்துத் தகர்த்தனர். 50 சைக்கிள்களையும் தீயிட்டுக்கொளுத்தினர்.

மேலும் பாலைமடு வயல் வெளிகளுக்குள் விதைப்பிற்காகச் சேமித்துவைக்கப்பட்ட நெல் மூடைகளோடு 10 வாடிகளையும் தீவைத்துக்கொளுத்தினர்.

அடுத்த நாள் 14 ஆம் திகதி புணாணை கன்னிச்சை முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மியாங்குளத்தை சுற்றிவளைத்தனர். அங்கு சேனைப்பயிர்ச்செய்கையிலும் மாடுமேய்ப்பதிலும் ஈடுபட்டு வாழ்க்கைநடத்தும் தொழிலாளர்களின்குடிசைகள் 185க்குத் தீயிட்டனர். இச்சம்பவத்தில் உடைமைகளோடு சேனைப் பயிர்களும் எரித்து நாசமாக்கப்பட்டன.

அதேவேளை மகிழவெட்டுவான், பாலமடுப் பகுதியில் இருந்து ஈரலிக்குளம் வெளிக்கு ஹெலிகெப்டர்கள் மூலம் இறக்கிய இராணுவத்தினர் பலத்த துப்பாக்கிப்பிரயோகமும் ஷெல் தாக்குதலும் மேற்கொண்டனர். பின்னர் 15 வீடுகள், ஒரு உழவு இயந்திரம், மோட்டார் சைக்கிள் ஒன்று, சைக்கிள்கள் இரண்டு, 15 நெல் மூடைகள் என்பவற்றிற்குத் தீவைத்துக் கொளுத்தினர்.

பின்னர் அங்கிருந்து 15 ஆம் திகதி இலுக்கு கிராமத்தை நோக்கி வந்த இராணுவத்தினர் இரண்டு வீடு, உடைமைகள், உணவுப் பொருள்களுக்கு தீயிட்டுவிட்டு, பயிர்களை நாசமாக்கியபடி வயல்கள் ஊடாக மட்டப்புன் தோட்டம் சென்றனர்.

மட்டப்புன் கிராமத்தில் இருந்து புலிபாய்ந்தகல் நோக்கி மூன்று பிரிவாகச் சென்ற இராணுவத்தினர் சிறுத்தைக்கல்லில் ஒரு பொதுமகனைக் கடுங் காயப்படுத்தினர். தாவணப்பட்டியூற்று என்னுமிடத்தில் 50 வயது வயோதிபர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

# 15 ஆம் நாள் போர்

★ சவூதி அரேபியாவின் பட்டினமான கஃப்ஜியை கைப்பற்றிய ஈராக் படைகள் தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டிலேயே அந்தப் பட்டினத்தை வைத்திருக்கின்றன. சுமார் நூறு ஈராக்கிய இராணுவத்தினர் அங்கு நிலைகொண்டுள்ளனர் என பாக்தாத் வானொலி தெரிவித்தது. நேற்று முன்தினம் இரவிற்குப்பின்னர் நான்கு தடவைகள் அந்தப் பட்டினத்தில் இருந்து ஈராக்கிய படைகளை ஊடறுத்துத் தாக்கியதாக கூட்டுப்படைத் தளபதி தெரிவித்தார்.

★ ஈராக்கால் கைப்பற்றப்பட்ட சவூதி அரேபிய நகரத்தை மீண்டும் கைப்பற்றுவதற்காக அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படை 24மணிநேரமும் முனைந்து வருகிறது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

★ இந்தப்போரின்போது அமெரிக்கத் தரப்பில் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், ஈராக்கிய இராணுவத்தினர் பட்டாரியாப் படையின் ஆதரவுடன் சவூதி அரேபிய நகரத்தைக் கைப்பற்றியதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்ததாக பி.பி.ஸி. அறிவித்தது.

★ குவைத்துக்குச் சொந்தமான மற்றொரு தீவை தாம் மீண்டும் கைப்பற்றிவிட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. கடல் கொந்தளிப்பு கடுமையாக இருக்கும் நேரங்களில் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருக்கும் 'குரா' என அழைக்கப்படும் தீவினை தாம் கைப்பற்றியதாக அமெரிக்கா தெரிவித்தது. 50 அமெரிக்க மாலுமிப் படையினர் அங்கு விமானம் மூலம் இறங்கியபோது அந்தத் தீவில் யாரும் இருக்கவில்லை என்று கூறப்படுகிறது.

★ ஈராக்கிற்கு மருத்துவக் குழுக்களையும் மருந்து விநியோகத்தையும் தாங்கள் அனுப்பி வைக்கப்போவதாக பல அரபுநாடுகள் அறிவித்துள்ளன.

★ வளைகுடாவில் கடவுளுக்கும் பிசாசுக்கும் இடையில் போர் நடக்கிறது என்றும், கடவுள் தன்பக்கம் இருக்கிறார் என்றும் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

★ சவூதியில் ஈராக் படையினருடன் சண்டையிட மொராக்கோஇராணுவம் மறுத்ததையடுத்து அமெரிக்கப்படைகளுக்கும் மொராக்கோ படைகளுக்கும் இடையில் மோதல் ஒன்று ஏற்பட்டது.

மரணம்

ணுவ, பொலிஸ் படையைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 1442 ஆகும். 672 பேர் காயம் அடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். சுமார் 270பேர் அங்கவீனமடைந்துள்ளார்கள். இந்தத் தகவலை நேற்று ரஞ்சன் விஜயரட்ண வாராந்த செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

நான்கு

தொடர்ந்து இப்பகுதியில்தேடுதல் நடாத்தி மூன்று பிள்ளைகளின் தந்தையான வரதன் குமார் (34), ஆறு பிள்ளைகளின் தந்தையான இராசா, ஐந்து பிள்ளைகளின் தந்தையான வடிவேல் ஆகியோரைக் கைது செய்து காஞ்சிக்குடா அதிரடிப்படை முகாமுக்குக் கொண்டு சென்றனர். அங்கு இவர்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்டனர்.

ஈரானின்

வித்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

யுத்த ஓய்வுக்கான முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் ஈரானின் தலைநகரான தெஹ்ரானில் இடம்பெறவுள்ளது.

பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள அல்ஜீரியா, பிரான்ஸ், ஜேர்மன், ஈராக் ஆகிய நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள் நேற்றிரவு தெஹ்ரான் வந்தடைந்தனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஈராக் குவைத் பூமியைவிட்டு வெளியேறினால் அன்றிப் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்று சவூதி மன்னர் நேற்றிரவு அறிவித்துள்ளார்.